கவிஞர் சீனு ராமசாமியின் கவிதைகள் வெளிப்படுத்தும் பெண்களின் உணர்வுகள்

ஈ. வளர்மதி
பதிவு எண்: 241112001024
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை
சாராள் தக்கர் கல்லூரி (தன்னாட்சி), திருநெல்வேலி
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி

முனைவர் பா.ஹெலன் சோபியா
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
சாராள் தக்கர் கல்லூரி (தன்னாட்சி)
திருநெல்வேலி

ஆய்வுச் சுருக்கம்

சங்க இலக்கியம் தொடங்கி இக்கால இலக்கியங்கள் வரை பெண்களின் உணர்வுகள் பேசப்படுகிறது. கவிஞர் சீனு ராமசாமியின் கவிதைகளிலும் பெண்களின் உணர்வுகள் எடுத்துரைக்கப்படுகின்றன. கவிஞர் பெண்ணியத்தை வெளிப்படையான அரசியல் கருத்துகளாக முன்வைப்பவர் அல்ல. மாறாக, பெண்ணின் அன்றாட வாழ்வில் ஊடுருவியுள்ள வலி, மௌனம், அன்பு, தோல்வி, எதிர்ப்பு ஆகியவற்றை இயல்பான கவிதை மொழியில் பதிவு செய்கிறார். .கவிஞரின் கவிதைகளில் பேசப்படும் பெண்களின் உணர்வுகளைப் பற்றி ஆராய்வதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

முன்னுரை

இந்திய திரைப்பட இயக்குநரும் கவிஞருமான சீனு ராமசாமி ஒன்பது திரைப்படங்களையும் பத்து கவிதை நூல்களையும் படைத்தளித்துள்ளார். அவர் இயற்றிய கோயில் யானையின் சிறுவன், முதல் ருசி ஆகிய இரண்டு கவிதை நூல்கள் வெளிப்படுத்தும் பெண்களின் உணர்வுகளை ஆராய்வதை நோக்கமாகக் கொண்டு இக்கட்டுரை அமைந்துள்ளது.

பெண்

பெண் என்பவள் குடும்பத்தின் அச்சாணியாகவும், ஆண் என்பவன் குடும்பத்தின் ஆணிவேராகவும் விளங்க கூடியவர்கள். பெண்ணே உலகத்தில் உள்ள அனைத்துக்கும் அச்சாணியாக விளங்குகிறாள். பெண் என்பவள் யார்? அவள் எப்படி இருக்க வேண்டும் என்பதை இன்னிலை என்ற நூல்,

"ஒத்த உரிமையளா ஊடற்கு இனியளாக
குற்றம் ஒருஉம் குணத்தளாக - கற்றறிஞர்ப்
பேணும் தகையளாக,கொண்கன் குறிப்பறிந்து
பேணும் தகையினாள் பெண்."

(சு.ஆனந்தன், தமிழ் இலக்கிய வரலாறு, ப-67)

என பெண் என்பவள் கணவனுக்கு ஒத்த உரிமையுள்ளவளாகவும், ஊடல் பொழுதில் இனிமையானவளாகவும், குற்றங்களை விலக்கக் கூடிய குணமுடையவளாகவும், சான்றோரைப் பேணும் தகைமை உடையவளாகவும், கணவனின் குறிப்பறிந்து நாணும் பண்புடையவளாகவும் விளங்க வேண்டும் என்று ஒரு சிறந்த இல்லறப் பெண்மையின் குண நலன்களை இப்பாடலடிகள் விளக்குகின்றன.

கவிஞர் சீனு ராமசாமியின் கவிதைகள் கூறும் பெண்களின் உணர்ச்சிகள்

கவிஞர் சீனு ராமசாமி தன்னுடைய கவிதைகளில் தாய்மை உணர்வு, மனைவியின்

அன்பு, பெண்ணின் கனவு, உற்ற துணை போன்ற பல கவிதைகளில் பெண்களின் உணர்வுகளை குறித்துப் பேசியுள்ளார்.

தாய்மை உணர்வு

தாய் என்பவள் உலகிற்கு உயிர்களை ஈன்றெடுப்பவள். அன்பு ,கருணை, தியாகம் போன்ற நற்குணங்களின் உருவமாக விளங்குபவள். தாயைப் பற்றி,

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்
தாயிற் சிறந்த ஒரு கோயிலும் இல்லை."
(சு.ஆனந்தன், தமிழ் இலக்கிய வரலாறு, ப-67)

எனக் கொன்றை வேந்தன் என்ற நூல் தாயை தெய்வமாகவும் கோவிலாகவும் உருவகப்படுத்தியுள்ளது.

கவிஞர் சீனு ராமசாமி ஒரு தாயின் ஏக்கத்தை,

"இருந்த காலத்தில் பசியில்லை
இல்லாத காலத்தில்
எம் பிள்ளை இங்க வந்து நிக்குதே" என்பாள்.
(சீனு ராமசாமி, கோயில் யானையின் சிறுவன், ப- 82)

என்ற வரிகளில் புகை, நெருப்பு மற்றும் மஞ்சள் நிற மின் விளக்கின் வெளிச்சத்தில் சுவற்றில் விழும் நிழல்கள் ஒரு நவீன ஓவியன் வரையாத "அரூப ஓவியம்" போல அம்மாவின் உழைப்பால் உருவான அந்த சமையலறை தோன்றுகிறது. காலங்கள் கடந்த பின்பும் அம்மா அன்று கால் மடக்கி அமர்ந்து சமைத்த இடமும் அந்த வீடும் மாறாமல் அப்படியே இருக்கிறது என்று நினைத்து அவ்விடத்தில் அமரும் போது கவிஞருக்கு கண்ணீர் சுரக்கிறது. அனைத்து வசதிகளும் இருந்த போது பசி தெரியவில்லை, ஆனால் கையில் காசு இல்லாத நேரத்தில் பசியோடு வந்து நிற்கிறானே என்று பசியோடு நிற்கும் மகனைப் பார்த்து தாய் ஏங்கும் நிலையையும் பழைய நினைவுகளை சமையலறையில் இருந்து கொண்டு மீட்டெடுப்பதாகவும் இக்கவிதை வரிகள் அமைந்துள்ளன.

அதே கவிதையில்,

"அம்மாவைப் பற்றி எழுதுகையில்
அவள் விரல் பதித்த
வெந்த இட்லியொன்று அழியாத ஓவியமாக
மனதில் இருக்கிறது."
(சீனு ராமசாமி, கோயில் யானையின் சிறுவன், ப-82)

என்ற வரிகள் சமையலறையில் தன் விரல்கள் பதித்து எடுக்கும் அம்மாவின் இட்லி அழியாத ஓவியமாக மனதில் ஊசலாடுவதை கூறும் போது, சங்க இலக்கியத்தில் குறுந்தொகை பாடல் ஒன்று நினைவுக்கு வருகிறது.

"முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்"
(குறுந்தொகை, பா.எண் -167 இ ப-386)

என்னும் பாடல் வரிகள் கணவனுக்காகத் தலைவி முற்றிய கெட்டித் தயிரைக் காந்தள் மலர் போன்ற மெல்லிய விரல்களால் பிசைந்து மோர்க் குழம்பு செய்தது போல இங்கு கவிஞனின் தாய் இவ் விரல்கள் பதித்து இட்லியை எடுக்கிறாள். இக்கவிதையின் மூலம் ஒரு தாயின் ஏக்கம் அதாவது பசியோடு நிற்கும் குழந்தையின் நிலையைக் கண்டு தாய் படும் மன வேதனையைக் கவிஞர் காட்சிப்படுத்துகிறார். கவிஞருக்கும் அவரது தாய்க்குமான உறவின் பயணத்தையும் பழைய நினைவுகளை மீட்டெடுப்பதையும் கவிதையின் மூலம் உணர்ந்து கொள்ள முடிகிறது.

உற்ற துணை

புவியில் நாம் வாழ்வதற்கு ஆதாரமாக இருப்பது நமக்கான துணை தான். கணவன் என்றால் மனைவியும் மனைவி என்றால் கணவனும் ஒருவருக்கொருவர் உறுதுணையாகவும் பக்கபலமாகவும் வாழ்வது தான் திருமண பந்தத்தின் அடிப்படையாக அமைகிறது. ஒருவர்க்கொருவர் துணையாக இருப்பது உறவின் பாலமாக அமைகிறது. அதனை "துணை" என்னும் தலைப்பில்,

"கைவிடப்பட்ட ஒருத்தி
துணையாக இருக்கிறாள்
கடவுளாக கைவிடப்பட்ட ஒருவனுக்கு."
(சீனு ராமசாமி, முதல் ருசி, ப- 72)

என்ற வரிகளில் அனைவராலும் கைவிடப்பட்ட ஒரு பெண் அதே போன்று எல்லோராலும் கைவிடப்பட்ட ஓர் ஆணுக்கு துணையாக இருக்கிறாள். அப்படி துணையாக இருக்கும் பெண் ஆணின் பார்வையில் தெய்வமாக காட்சியளிக்கிறாள். நாம் துவண்டு விழும் வேளையில் நம்மை கை தூக்கி விட ஒரு உறவு தேவைப்படுகிறது. கலித்தொகை பாடலொன்று

"போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை."

(கலித்தொகைஇ பா.எண்-133 இ ப-355)

என்னும் வரிகள் நம் மீது அன்புக் கொண்டோரை பிரியாமல் வாழக் கற்றுக் கொடுக்கிறது. அவ்வாறு ஒரு பெண் எந்த ஒரு சுழ்நிலையிலும் கணவனை விட்டுப் பிரியாமல் இருப்பாளேயானால் அந்த ஆணின் பார்வையில் அவ்வுறவு விலையேறப் பெற்றதாக காணப்படுகிறது என்பதை கவிதை நமக்கு ஆழமாக விளக்குகிறது.

இதனை, திருக்குறள் கவியுரை என்ற நூல்,

"தம் அன்புக்குரியோரின்
துன்பம் கண்டு துடித்தே- அனிச்சையாய்
விழி வடிக்கும் கண்ணீரன்றோ
அன்பின் அடையாளம்!
அன்பை அடைத்து வைக்கும் தாழ்ப்பாள்
உண்டோ உலகில்."

(முனைவர்.தாமரை (ப.ஆ),
திருக்குறள் கவியுரை, ப-59)

என்னும் வரிகள் நம்மை நேசிப்பவர்களின் துன்பம் கண்டு உள்ளம் துடிக்க வேண்டும் என்பதை புலப்படுத்துகிறது. அதனைப் போன்று கவிஞர் சீனு ராமசாமியின் கவிதையிலும் கைவிடப்பட்ட ஒருத்தி தான் கைவிடப்பட்டதனால் விளைந்த துன்பத்தின் நிலையை உணர்ந்ததால் தான் கைவிடப்பட்டவனுக்கு உறுதுணையாக நிற்கிறாள் என்பதை உணரமுடிகிறது. கணவன் மனைவி உறவு, ஒரு அன்பின் அடையாளமாக இக்கவிதையின் மூலம் பறைசாற்றப்படுகிறது.

பெண்ணின் கனவு

ஒவ்வொரு பெண்ணுக்கும் வாழ்வில் பல கனவுகள் இருக்கும். அக்கனவு நிறைவேற ஒவ்வொரு பெண்ணும் சந்திக்கின்ற தடைகள் ஏராளம். ஒரு பெண்ணின் பயணத்தை கவிஞர் குறிப்பிடுகையில்,

"அவள் மேகங்களுக்கு பின்னால் ஓடினாள்
அவள் மேகங்கள் கலைந்தன
வான் பார்க்கவே நேரமின்றிப்போன
அவளுக்கு
படித்து மேகங்களுக்கிடையில்
விமானத்தில் பறக்கும்
ஒரு மகள் பிறந்து வளர்ந்து விட்டாள்
ஒவ்வொரு பெண் மக்கள் கதைக்குள்ளும்
மேகங்கள் வந்து போயிருந்தன."

(சீனுராமசாமி, கோயில் யானையின் சிறுவன், ப- 154)

என்ற வரிகள் மழலைப் பருவத்தில் ஒரு சிறுமி மேகங்கள் தன்னைப் பின் தொடர்வதாக எண்ணிக்கொண்டு அதனோடு விளையாடுகிறாள். குளத்தில் நின்ற மேகங்களில் பூக்கள் புத்திருப்பதைக் கண்டு அதனை, "வெண்மேகப் புக்கள்" என்கிறாள். அவள் நிதானமாக மிதிவண்டி ஓட்டத் தொடங்கிய போது மேகங்கள் மழையைப் பொழிய தந்தையின் அழுகையையும், தாயின் கவலையையும் பார்க்கிறாள். இதில் "மழை" என்பது அவள் வாழ்வில் சந்திக்கின்ற சவால்களைக் குறிக்கிறது. பாட்டி அவளை ஒரு மூலையில் அமர வைப்பது ஒரு பெண் சமூகக் கட்டுப்பாடுகளுக்குள் அடக்கப்படுவதைச் சுட்டிக் காட்டுவதாக அமைகிறது.காலம் மாறிப் போக வானத்தைப் பார்க்கக் கூட நேரமில்லாமல் முடக்கப்பட்ட அந்தப் பெண்ணுக்கு இப்போது ஒரு மகள் பிறந்து வளர்கிறாள். தாயால் அடைய முடியாத உயரத்தை அவளுடைய மகள் எட்டுகிறாள்.

"நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்,
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்,
திமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால்
செம்மை மாதவர் திறம்புவ தில்லையாம்"

(மகாகவி பாரதியார் கவிதைகள்இ ப-254)

என்ற பாரதியாரின் வரிகளுக்கு இணங்க சீனு ராமசாமியின் கவிதையில் இடம் பெறும்

பெண்ணின் மகள் ''விமானத்தில் பறக்கிறாள்'' என்று சித்தரிக்கப்படும்போது அந்த பெண் பாரதி கண்ட புதுமைப் பெண்ணாக காட்சியளிக்கிறாள் என்பதை இக்கவிதை நமக்கு வெளிப்படுத்துகிறது. ஒரு தலைமுறையின் தியாக உணர்வு அடுத்த தலைமுறையை சிறகுகளாக மாற்றும் உந்துச் சக்தியாக மாறுகிறது என்பதில் எவ்வித ஐயப்பாடுமில்லை. கவிதையின் இறுதியாக ஒவ்வொரு பெண்ணின் வாழ்க்கையிலும் ஆயிரம் கனவுகள் (மேகங்கள்) இருக்கும். அவை சிலநேரங்களில் மழையாகக் கண்ணீரைத் தருபவையாகவும், சில நேரங்களில்களைந்து போகின்றவையாகவும் இருக்கிறது. ஆனால் இக்ககவிதை ஒருவரின் கனவுகள் ஏதோ ஒரு வடிவில் அடுத்தத் தலைமுறை மூலமாகவாவது நிஜமாகின்றன என்ற ஒரு ஆழமான உண்மையை உணர்த்துகிறது.

ஒரு பெண்ணின் மழலைப் பருவம் தொடங்கி, அவள் வளர்ந்து ஒரு தாயாக மாறும் வரையிலான பயணத்தை மேகங்களைக் கொண்டு கவிஞர் கண்முன் காட்சிப்படுத்துகிறார்.

முடிவுரை

கவிஞர் சீனு ராமசாமியின் கவிதைகளில் தாய்மை உணர்வு, மனைவியின் அன்பு, ஒரு பெண்ணின் தியாக உணர்வு போன்றவை பேசப்படுகின்றன. சீனு ராமசாமியின் கவிதை மொழியும் பெண்ணிய உணர்வும் எளிமையானது, கிராமிய தன்மை கொண்டது, அலங்காரமற்றது. இந்த எளிமையே அவரது பெண்ணிய உணர்வின் அடித்தளம். பெண் அவரது கவிதைகளில் அழகுக்கான பொருளாக இல்லை. அவள் உழைப்பவள், நினைப்பவள், முடிவெடுப்பவள். பெண்ணின் வாழ்வு பெரிய சம்பவங்களால் அல்ல. சிறிய அன்றாட அனுபவங்களால் வடிவமைக்கப்படுகிறது என்பதைக் கவிஞர் உணர்த்துகிறார். அம்மாவின் விரல் பதித்த இட்லியை அழியாத ஓவியமாகவும், மனைவியை தெய்வமாகவும், ஒரு பெண்ணைப் பாரதி கண்ட புதுமைப் பெண்ணாகவும் தன்னுடைய கவிதைகளில் பெண்களின் உணர்வுகளைப் பேசும் இடங்களில் காட்சிப்படுத்துகிறார். தாயின் ஏக்க உணர்வு, கவிஞரின் ஏக்க உணர்வு, மனைவியின் புரிந்து கொள்ளல் உணர்வு, ஒரு பெண்ணின் கனவுகள் உடையும் தருணம் போன்றவற்றை தன்னுடைய கவிதைகளில் ஆழமாக வெளிப்படுத்துகிறார் என்பதை இக்கட்டுரையின் மூலம் அறிந்து கொள்ள இயலும்.

துணை நூற்பட்டியல்

1. ஆனந்தன். சு, தமிழ் இலக்கிய வரலாறு, 24ஆம் பதிப்பு- ஜூன் 2016, கண்மணி பதிப்பகம், திருச்சி.
2. டாக்டர் மா. இராசமணிக்கனார், கலித் தொகை, முதற்பதிப்பு- ஆகஸ்ட் 2011, பூம்புகார் பதிப்பகம், 127, (ப.எண் : 63), பிரகாசம் சாலை (பிராட்வே), சென்னை.
3. முனைவர் வி. நாகராசன், குறுந்தொகை மூலமும் உரையும், முதற்பதிப்பு - ஏப்ரல் 2024, நியு செஞ்சுரி புக் ஹவுஸ்.
4. கவிஞர் சீனு ராமசாமி, கோயில் யானையின் சிறுவன், முதற்பதிப்பு- ஆகஸ்ட் 2024, விகடன் பிரசுரம், 757 அண்ணா சாலை, சென்னை.
5. கவிஞர் சீனு ராமசாமி, முதல் ருசி, முதற்பதிப்பு- 2025, சந்தியா பதிப்பகம், 77, 53வது தெரு, 9வது அவென்யு, அசோகர் நகர், சென்னை.
6. முனைவர் தாமரை (பதிப்பாசிரியர்) இதிருக்குறள் கவியுரை, புங்கோதை பதிப்பகம், 1ஃ279 சத்குரு ஹோம்ஸ் முதல் தெரு, ரெட்டை மண்டபம் சேலம், முதன்மைச் சாலை, நொச்சியம், திருச்சியார், பாரதியார் கவிதைகள், முதற்பதிப்பு - 2013, வ. உ. சி. நூலகம்.